## 28-03-2013 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : கூட்டு ஒப்பந்தமும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும்**

**தொடக்கவுரையாடல் : சு. விஜயகுமார்**

**கூட்டு ஒப்பந்தம் என்றால் என்ன?**

தொழிற் பிணக்குச் சட்டம், கூட்டு ஒப்பந்தம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை எடுத்துரைத்துள்ளது. அதன்படி கூட்டு ஒப்பந்தம் என்பது தொழில் வழங்குனருக்கும் தொழில் பெறுனருக்கும் (நடைமுறையில் தொழிற் சங்கங்களுக்கும்) இடையில் அவர்களின் சிறப்புரிமைகள், உரிமைகள், கடமைகள், பிணக்குத் தீர்வுப் பொறிமுறைகள் தொடர்பில் கூட்டுப் பேரம் பேசல் அடிப்படையில் எட்டப்படும் இணக்கப்பாடாகும்.

ஒரு குறிப்பிட்ட தொழிற் துறையில் உள்ள தொழில் வழங்குனர்களும் தொழில் பெறுனர்களும் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தமது தொழில் நடவடிக்கையை முறைமைப்படுத்திக் கொள்ள முடியும். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்யப்படும் போது அது நியதிச் சட்டங்களின் (ஏனைய தொழிற் சட்டங்களின்) ஏற்பாடுகளை மீறும் வகையில் அமைவது கூட்டு ஒப்பந்தத்தை வரிதாக்கிவிடும். உதாரணமாக ஊழியர் சேமலாப நிதி வழங்குவதனை நிறுத்தும் வகையில் ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட முடியாது. எனினும் கூட்டு ஒப்பந்தத்ததில் அரசு சட்ட ரீதியாக எந்தவித தலையீட்டையும் செலுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டு ஒப்பந்தத்தில் யார் பேரம் பேசுபவர்களாக இருக்கத் தகுதியானவர்கள் என்பதைத் தொழில் அமைச்சர் தீர்மானிப்பார். ஒரு தொழிற் துறையில் 40% அல்லது அதனிலும் அதிகமான உறுப்புரிமையைக் கொண்ட தொழிற் சங்கங்கள் கட்டாயம் கூட்டு ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என 1999ம் ஆண்டுத் தொழில் பிணக்குச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தம் குறிப்பிடுகிறது.

கூட்டு ஒப்பந்தம் ஒரு குறித்த தொழிற் துறையில் மேற்கொள்ளப்படும் போது, தொழில் ஆணையாளர் அதனை ஏற்று அரச வர்த்தமானியில் வெளியிடும் போது அது சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும். எனவே கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகள் மீறப்படும் போது அது தொடர்பாகத் தொழில் திணைக்களம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கக் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

> மலையகத்தில் அனைத்துத் தரப்பினராலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், தொழிற்சங்க உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் பேசப்படுவதும் அதனூடாகத் தொழிலாளர்களை சக்திப்படுத்துவதுமே நீண்டகால நோக்கில் தொழிலாளர் உரிமைகள் உறுதிப்படுத்துவதற்கான வழியாக இருக்கும்.

**பெருந்தோட்டத் தொழிலாளர்களும் கூட்டு ஒப்பந்தமும்**

இலங்கையில் பெருந்தோட்டத் துறையில் மேற்கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தமே ஒரு பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களின் நலன்களோடு தொடர்புடையதாகும். ஒரு வகையில் அது முழு மலையக மக்களினது வாழ்வியலைத் தீர்மானிக்கும் அம்சம் என்றே கூறலாம். எனவே கூட்டு ஒப்பந்தம் அரசியல் தொழிற்சங்க ரீதியில் மலையக்தில் மிகுந்த முக்கியத்தும் பெற்றுள்ளது. அத்தோடு தேசிய ரீதியாகவும் முக்கியத்துவம் பெறும் விடயமாக உள்ளது.

**பொருந்தோட்டத் தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தத்தின் வரலாறும் உள்ளடக்கமும்**

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில்; பெருந்தோட்டங்கள் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்ட போதும் கூட்டு ஒப்பந்த அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் நிர்வகிக்கப்பட வில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நியதிச் சட்டங்கள் மற்றும் பொதுவாகக் காணப்பட்ட தொழிற் சட்டங்களின் அடிப்படையிலேயே பெருந்தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. எனவே சம்பளமானது சம்பள நிர்ணய சபையினூடாகத் தீர்மானிக்கப்பட்டது.

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**அனைத்துலக பெண்கள் நாள் 2013**

மங்களா சங்கர் | 07-03-2013



ரோசா லக்சம்பேர்க்

ரோசா லக்சம்பேர்க் (*Rosa Luxemburg*, மார்ச் 5, 1870/71 – ஜனவரி 15, 1919), போலந்தில் பிறந்த ஒரு ஜெர்மனிய மார்க்சியவாதியும் சோசலிச மெய்யியலாளரும் ஒரு புரட்சியாளரும் ஆவார்.

முதலாம் உலகப் போரில் ஜேர்மனி பங்குபற்றியதை ஜேர்மனி சமூக-ஜனநாயகக் கட்சி (ஜேர்மன் சோசியல்-டெமோகிரட்டிக் கட்சி) ஆதரித்ததைத் தொடர்ந்து இவர் மற்றொரு மார்க்சியவாதியான கார்ல் லீப்னெக்ட்டுடன் இணைந்து "புரட்சிகர ஸ்பார்ட்டாசிஸ்ட் முன்னணி" (Spartacist League) என்ற அமைப்பை உருவாக்கினார். இதுவே பின்னர் ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரைப் பெற்றது. ஸ்பார்டாசிஸ்ட் லீக் தலைமையில் ஜனவரி 1919 இல் நடத்தப்பட்ட பேர்லின் புரட்சி தோல்வியில் முடிந்தது. ரோசா லக்சம்பேர்க்கின் ஆதரவிலான இப்புரட்சி ஃப்ரீகோர்ப்ஸ் என்ற வலதுசாரி துணை இராணுவக்குழுவினரால் நசுக்கப்பட்டது. ரோசா மற்றும் லீப்னெக்ட் உட்பட பல இடதுசாரிகள் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் இறப்பின் பின்னர் ரோசா லக்சம்பேர்க், கார்ல் லீனெக்ட் இருவரும் ஜனநாயக சோசலிஸ்டுகளாலூம் மார்க்சியவாதிகளாலும் மாவீரர்களாகப் போற்றப்படுகின்றனர்.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழினுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

**கூட்டு ஒப்பந்தமும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும்**

**முன்பக்கத் தொடர்ச்சி..**

1998ம் ஆண்டு நிகழ்ந்த முதற் கூட்டு ஒப்பந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தொழிற் சங்கங்களுக்கும் பெருந்தோட்டக் கம்பனிகள் சார்பாக இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் இடம்பெற்றது.

**யார் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்?**

தற்போது பெருந்தோட்டத் தொழிலாளர் சார்பாக இரண்டு தொழிற்சங்கங்களும் ஒரு தொழிற்சங்கக் கூட்டுச் சம்மேளனமும் தொழிலாளர் சார்பாகப் பேரம் பேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர்.

1. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
2. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் (இது ஐ.தே. கட்சியின் பெருந்தோட்டத் துறைக்கான தொழிற்சங்கம்)
3. தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி அது பல சிறிய தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய சம்மேளனமாகும்.

பெருந்தோட்டக் கம்பனிகள் சார்பாக இலங்கை முதலாளிமார் சம்மேளனம் பேரம் பேசுகிறது.

தற்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2003ம் ஆண்டுச் செய்யப்பட்ட 13ம் இலக்க கூட்டு ஒப்பந்தத்தினால் ஆளப்படுகின்றார்கள். இந்த அடிப்படைக் கூட்டு ஒப்பத்தில் 6ம் உறுப்புரைக்கு அமைய, காலத்துக்குக் காலம் சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தம் செய்யப்படுகிறது. 2011ம் ஆண்டு செய்யப்பட்டது அவ்வாறான ஒரு சம்பளக் கூட்டு ஒப்பந்தமாகும்.

2003ம் ஆண்டுச் செய்யப்பட்ட அடிப்படைக் கூட்டு ஒப்பந்தத்தில் உள்ள கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளம் பற்றிய தீர்மானம், வருடம் ஒன்றிற்கும் மாதம் ஒன்றுக்கும் வழங்கப்பட வேண்டிய வேலை நாட்கள், வேலை ஒழுங்கு முறைகள், வேலைக்குத் தேவையான தொழிலாளர்கள் தொழிலாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள், மேலதிகக் கொடுப்பனவு, வரவுக்கான போனஸ், சுகயீன விடுமுறை, சேவையில் இருந்து ஓய்வு பெறும் வயது,தாய் நல நன்மைகள், தோட்டத்தில் உள்ள மரபு ரீதியான செயற்பாடுகள், தொழிலாளர் - தோட்ட முகாமையாளர் உறவு, ஒழுக்காற்று நடவடிக்கை, தொழில் உறவுகள் மற்றும் தொழிற் சங்கங்களுக்கும் தோட்ட முகாமைக்கு இடையிலான உறவுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**கூட்டு ஒப்பந்தத்தமும் மலையகத்தில் நிலவும் தொழிற்சங்க வாதமும்**

கூட்டு ஒப்பந்தக் காலத்தில் மட்டும் தொழிற் சங்கங்கள் "உயிர்ப்பு" பெறுகின்றனர். தாமே சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்தோம் என மார்தட்டிக் கொண்டு தொழிலாளர்களைத் தீர்மானகரமான சக்தியாக மாற்றுவதில் பின்னிற்கும் போக்குத் தொடர்கிறது. இது மலையகத் தொழிற்சங்கங்களின் பிற்போக்குத் தன்மைக்கான சான்று.

சம்பள உயர்வுக்கு மறுக்கப் பெருந்தோட்டக் கம்பனிகள் முன்வைக்கு "நியாயங்களும்" தொழிற் சங்கங்களும் கம்பனிகள் நட்டத்தில், உற்பத்திதிறன் வீழ்ச்சி, உலகச் சந்தையில் தேயிலை இறப்பர் விலை வீழ்ச்சி, பெருந்தோட்டத்தில் கம்பனிகள் சமூக நல திட்டங்களுக்குப் பாரிய செலவு ஏற்படுகின்றமை போன்ற காரணிகள் கூறப்பட்டாலும் இவைகள் அடிப்படையற்றவைகளாகும். இந்த அடிப்படையற்ற காரணிகளை மக்கள் வெளிப்படுத்த தொழிலாளர் சார்பாகக் கையொப்பமிடும் தொழிற்சங்கங்கள் முன்வருவதில்லை.

**2013ம் ஆண்டுக் கூட்டு ஒப்பந்தம் எப்படி அமைய வேண்டும் ?**

சம்பளக் கூட்டு ஒப்பந்தம் என்பதைக் கடந்து அடிப்படைக் கூட்டு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். குறிப்பாகத் தோட்ட முகாமையாளர்களும் தோட்டத் தலைவர்களும் பேரம் பேசும் நிலையை ஏற்படுத்ததாத வகையில் அமைய வேண்டும்.

02 வருடத்திற்கு ஒரு முறை சம்பளம் பற்றிப் பேசுவது தொழிலாளர்களுக்குப் பாதகமானது. எனவே வாழ்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் சம்பளம் வருட வருடம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டக் கம்பனிகள் பெருந்தோட்டத் துறையைச் சிறப்பாகப் பராமரிப்பதனை உறுதிப்படுத்திப் பெருந்தோட்டங்கள் சிறுதோட்ட உடைமையாளர்களுக்குக் குத்தகைக்கு விடப்படும் நிலையைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

பெருந்தோட்டக் காணிகள் சிறுதோட்ட உடமையாளர்களுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்ற நிலையில் தொழிலாளர்களுக்குக் காணி பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்த மக்கள் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் தொழிற்சங்கங்களுக்கு அழுத்தம் கோடுக்க வேண்டும்.

முடிவாக மலையகத்தில் அனைத்துத் தரப்பினராலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், தொழிற்சங்க உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் பேசப்படுவதும் அதனூடாகத் தொழிலாளர்களை சக்திப்படுத்துவதுமே நீண்டகால நோக்கில் தொழிலாளர் உரிமைகள் உறுதிப்படுத்துவதற்கான வழியாக இருக்கும்.

**அனைத்துலக பெண்கள் நாள் - 2013**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**


* அனைத்துலகப் பெண்கள் நாள் பற்றிய அறிமுகம்

* 2013 அனைத்துலகப் பெண்கள் நாளின் கருப்பொருள்

* இலங்கைச்சூழலில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

* இலங்கையில் பெண்களுக்கு இருக்கும் சட்டரீதியான உரிமைகள்

* பெண்களின் உரிமைகளைக் காப்பதிலும், பெண்விடுதலையினை வென்றெடுப்பதிலும் ஆண் இளைஞர்களின் பங்கு.




சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA